**2025 செப்டம்பர் மாதம் 24 – ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 134/2023**

MCOP No.: 134/2023 – பாப்பாத்தி PW1 24.09.2025

க/பெ.சக்திவேல்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 1ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது மகன் விபத்தில் இறந்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளதில் விபத்து குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மகன் அந்த விபத்து சமயத்தில் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்றும், பேருந்து எவ்வாறு வந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் விபத்து குறித்து கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் போலீசார் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அடுத்தவர்கள் சொல்லி எனக்கு தெரியும். எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளது. மேற்படி இருச்சக்கர வாகனத்தின் எந்த கம்பெனி இன்சூரன்ஸ் இருந்தது என்று பெயர் தெரியாது. விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பது குறித்து எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில்

எனது மகனுக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் கட்டிட கான்ட்ராக்டராக வேலை பார்த்து வந்தார். பள்ளி, வீடு, கடைகள் கட்டியுள்ளார். சாலைகள் பணி அமைத்துள்ளாரா என்றால் அமைத்துள்ளார். அரசாங்கத்தில் கட்டிட ஒப்பந்தக்காரராக இல்லை. எனது மகன் மேற்படி வேலைகளை பார்த்து வருவதற்கு அலுவலகம் தனியாக வைத்து கொள்ளவில்லை, வீட்டில் இருந்தபடியே பார்த்து வந்தார். எனது மகன் நடத்திவந்த தொழிலுக்கு பேரேடு, கணக்கு வழக்குகள் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். எனது மகன் கட்டிட கான்ட்ராக்டர், சாலை கான்ட்ராக்டர் என்று எனது மனுவில் சொல்லியுள்ளதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் நான் சொல்வது போல் பெரிய கான்ட்ராக்டராக தொழில் எதுவும் செய்யவில்லை என்றும், கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல, வருமான வரி செலுத்தியுள்ளார். எனது மகன் தொழில் செய்யும்போது வருமான வரி செலுத்துவதற்கு ஆடிட்டர் வைத்திருந்தாரா என்றால் அந்த ஆடிட்டர் பெயர் சந்திரவதனா. எனது மகன் எந்த ஆண்டு முதல் தொழில் நடத்தி வந்தார் என்றால் ஞாபகமில்லை, ஆனால் 15 வருடங்களாக தொழில் செய்து வந்தார். மேற்படி 15 வருட காலமும் வருமான வரி கணக்கு செலுத்தியிருப்பார் என்றால் சரிதான். எனது தரப்பில் 2022-2023 க்கான வருமான வரிக்கணக்கான ம.சா.ஆ.6 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மனுவில் எனது மகன் வருடத்திற்கு ரூ.4,99,390/- சம்பாதித்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வருமானத்தை நிரூபிக்க நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணத்திற்கு முந்தைய வருமான வரி கணக்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் அதை ஆடிட்டரிடம் தான் கேட்க வேண்டும். எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் இருந்தது, தற்போது விற்று விட்டோம். அந்த வீட்டை வாடகைக்கு விட்டிருந்தேன். எனது மகன் நான் சொல்லும் அளவிற்கு வருமானம் எதுவும் பெறவில்லை என்றும், வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு வருடா வருடம் ரூ.4 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளதில் என்ன முறையில் கொடுத்தார் என்றால் வங்கி மூலமாகவும் கொடுத்தார், ரொக்கமாகவும் கொடுத்தார். மேற்படி ரூ.4 லட்சத்தை வீட்டு செலவிற்காக செலவளித்தேன் என்றால் சரிதான். எனது மகன் எந்த வங்கிக் கணக்கில் வைத்திருந்தார் என்றால் யூனியன் வங்கி, கரூர் வைசியா வங்கி, இந்தியன் வங்கி ஆகிய வங்கிகளில் கணக்கு வைத்திருந்தார். அந்த வங்கிக் கணக்குகளை பார்த்தால் எனது மகன் வருடா வருடம் எவ்வளவு சம்பாதித்தார் என்று தெரியவரும் என்றால் சரிதான். அந்த வங்கிக் கணக்கு நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் ம.சா.ஆ.9 என்னுடைய வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது வங்கிக்கணக்கை பார்த்தால் எனது மகன் வருடா வருடம் ரூ.4 லட்சம் கொடுத்தாரா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் வருடா வருடம் தாய்மாமன் சீர்வரிசைக்காக செலவு செய்ததாக சொல்லியுள்ளதில் எந்தெந்த தேதிகளில் என்ன வகையில்

செலவு செய்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் வழக்கிற்காக சீர்வரிசைக்ககாக செலவு செய்தேன் என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது எனது மகனின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மகனின் கவனக்குறைவால் விபத்தானது நடைபெற்றதால் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்லர் என்றால் சரியல்ல. போக்குவரத்து செலவிற்காக ரூ.25,000/- செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருச்சக்கர வாகனத்திற்கு ரூ.75,000/- செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அடக்கம் செய்த வகையில் ரூ.50,000/- செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்கால இழப்பீட்டிற்காக ரூ.75,00,000/- கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.75,00,000/-த்தை என்ன வகையில் கணக்கீடு செய்தேன் என்றால் உயிரோடு இருந்தால் இன்னும் 20 வருடம் சம்பாதிப்பார் என கணக்கீடு செய்தேன். எனது மகனுக்கு தொடர்ந்து எல்லா வருடங்களும் கட்டிட ஒப்பந்தம் கிடைக்கும் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான், ஒரு வருடம் குறைவாகவும், அடுத்த வருடம் கூடுதலாகவும் கிடைக்கலாம். நான் மனுவில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள தொகை அதிகப்படியானது என்றும், அந்த தொகை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல

என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.9 ஆவணம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.09.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.24 18:11:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
24.09.2025